

திருச்சி தெற்கு மாவட்டக் கழக மாணவரணி அமைப்பாளர் முத்து வெங்கடேஷ் – சிவரஞ்சனி இணையரின் திருமண வரவேற்பு நிகழ்ச்சி திருச்சி காட்டூரில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு மண மக்களை வாழ்த்தினார். உடன் அமைச்சர் அன்பில் மகேஷ்பொய்யாமொழி மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.



வருகின்ற சட்டமன்றப் பேரவை கூட்டத் தொடர் 12.2.2024 அன்று தொடங்க இருப்பதால், சட்டப்பேரவையில் உள்ள கணினி, ஒலிப்பெருக்கி மற்றும் இருக்கைகள் சரியாக உள்ளனவா என்பதை பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு சென்னை, தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் (07.02.2024) பார்வையிட்டு, ஆய்வு செய்தார். இந்நிகழ்வின் போது, சட்டமன்றப்பேரவை முதன்மைச் செயலாளர் முனைவர் கி.சீனிவாசன் மற்றும் பொதுப்பணித்துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் ஆகியோர் நேற்று (08.02.2024) கோத்தகிரி அரசு மருத்துவமனையில் ரூ.3.03 கோடி செலவில் விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவு, அறுவை அரங்கு மற்றும் புறநோயாளிகள் பிரிவு கட்டிடத்தை திறந்து வைத்தார்கள்.




அரியலூர் மாவட்டம், செந்துறை ஊராட்சியில் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், சேலம் மண்டலம், மெய்யனூர் கிளை சார்பில் புதிய பேருந்து வழித்தடத்தினை போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

# நாடாளுமன்றத் தேர்தல் -2024

## ‘நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு’ மேற்கொள்ளும்

# விரிவான சுற்றுப்பயணம்

## (திருத்தப்பட்டது)

# தலைமைக் கழக அறிவிப்பு

மாண்புமிகு **தமிழ்நாடு முதலமைச்சர் - கழகத் தலைவர்** அவர்கள் வழங்கிய அறிவுரையின்படி, 2024 - நாடாளுமன்றத் தேர்தலுக்கான தி.மு.க. தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு பிப்ரவரி 5ஆம் தேதி தொடங்கி தமிழ்நாட்டின் முக்கிய நகரங்களுக்கு கனிமொழி கருணாநிதி, எம்.பி., அவர்கள் தலைமையில் பயணம் செய்து பல்வேறு தரப்பினர், பொதுமக்கள், கழக நிர்வாகிகளைச் சந்தித்து தேர்தல் அறிக்கைக்கான பரிந்துரைகளைக் கேட்க இருக்கிறது.

கீழே குறிப்பிட்டுள்ளவாறு மாவட்டக் கழகச் செயலாளர்கள் தேர்தல் அறிக்கைக் குழுவினருடன் தொடர்பு கொண்டு தங்கள் மாவட்டத்திற்குரிய வணிகர் சங்கங்கள், விவசாயிகளின் பிரதிநிதிகள், நெசவாளர்கள், மீனவ சங்கங்கள், தொழில் முனைவோர், தொழிற்சங்கங்கள், மாணவர் சங்கங்கள், கல்வியாளர்கள், அரசு ஊழியர்களின் பிரதிநிதிகள், தொண்டு நிறுவனங்கள், கழக நிர்வாகிகள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரையும் அழைத்து வந்து தி.மு.க. தேர்தல் அறிக்கைத் தயாரிப்புக் குழுவினரைச் சந்திப்பதற்கான ஏற்பாடுகளை ஒருங்கிணைக்க வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

## தேர்தல் அறிக்கை தயாரிப்புக்குழு விரிவான சுற்றுப் பயண விவரம் (திருத்தப்பட்டது)

| தேதி | இடம் | கழக மாவட்டம் |
|---|---|---|
| 2024 “ பிப்ரவரி - 9 | ஓசூர் | கிருஷ்ணகிரி கிழக்கு, கிருஷ்ணகிரி மேற்கு, தருமபுரி கிழக்கு, தருமபுரி மேற்கு |
| “ பிப்ரவரி - 10 காலை | கோயம்புத்தூர் | கோவை வடக்கு, கோவை தெற்கு, கோவை மாநகர், நீலகிரி |
| மாலை | திருப்பூர் | ஈரோடு வடக்கு, ஈரோடு தெற்கு, திருப்பூர் வடக்கு, திருப்பூர் தெற்கு,கரூர் |
| “ பிப்ரவரி - 11 | சேலம் | சேலம் கிழக்கு, சேலம் மேற்கு, சேலம் மத்திய, நாமக்கல் கிழக்கு, நாமக்கல் மேற்கு, கள்ளக்குறிச்சி வடக்கு கள்ளக்குறிச்சி தெற்கு |
| “ பிப்ரவரி - 16 | தஞ்சாவூர் | தஞ்சை வடக்கு, தஞ்சை மத்திய, தஞ்சை தெற்கு, திருவாரூர், நாகை, மயிலாடுதுறை, திருச்சி வடக்கு, திருச்சி தெற்கு, திருச்சி மத்திய, புதுக்கோட்டை வடக்கு, புதுக்கோட்டை தெற்கு |
| “ பிப்ரவரி - 17 | விழுப்புரம் | விழுப்புரம் வடக்கு, விழுப்புரம் தெற்கு, கடலூர் கிழக்கு, கடலூர் மேற்கு, அரியலூர், பெரம்பலூர் |
| “ பிப்ரவரி -18 காலை | வேலூர் | வேலூர் ,இராணிப்பேட்டை, திருப்பத்தூர் |
| மாலை | ஆரணி | திருவண்ணாமலை வடக்கு, திருவண்ணாமலை தெற்கு |
| “ பிப்ரவரி 21, 22, 23 | சென்னை | சென்னை வடக்கு, சென்னை வடகிழக்கு, சென்னை கிழக்கு, சென்னை மேற்கு, சென்னை தென்மேற்கு, சென்னை தெற்கு, காஞ்சிபுரம் வடக்கு, காஞ்சிபுரம் தெற்கு, திருவள்ளூர் கிழக்கு, திருவள்ளூர் மேற்கு, திருவள்ளூர் மத்திய |

குறிப்பு: மேற்குறிப்பிட்டுள்ள இடங்களில் கழக தேர்தல் அறிக்கை தயாரிப்புக்குழு வரும் சில நாட்களுக்கு முன்பாகவே, இக்குழு வருவதை உள்ளூர் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்துவதோடு, கோரிக்கை மனு பெறுவதற்கான இடவசதி உள்ளிட்ட அனைத்து வசதிகளை ஏற்படுத்த வேண்டுமென அந்தந்த மாவட்டக் கழகச் செயலாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள் : 6.2.2024

**தலைமைக் கழகம்**
தி.மு.க.

### ஈரோடு மாநகரக் கழக துணைச் செயலாளர்

# கே.சந்திரசேகர் இல்லத் திருமண வரவேற்பு விழா!

## கழகத்தினர் வாழ்த்து!

ஈரோடு, பிப். 9 -

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நல்லாசியுடன், தமிழ்நாடு முதலமைச்சரும், கழக தலைவருமான தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் நல்வாழ்த்துகளுடன் ஈரோடு மாநகரக் கழக துணைச் செயலாளர் கே.சந்திரசேகர் மகனும் மாமன்ற உறுப்பினர் சி.பிரவீனா சகோதரருமான சி.பிரதீப்பிற்கும், வீரமணி - மதியழகி ஆகியோரின் மகள் வீ.சௌமதிக்கும் திருமண வரவேற்பு விழா 10.2.2024 சனிக்கிழமை மாலை 6 மணிக்கு மேல் 9 மணிக்குள் ஈரோடு திண்டல் மேட்டுக்கடை தங்கம் மஹால் - IIல் நடைபெற உள்ளது.

நாளை திருமண வரவேற்பு விழாவில் மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வார்டு கழக நிர்வாகிகள் அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள், ஆன்றோர் சான்றோர்கள், அனைத்து கட்சி பிர முகர்கள், கழக உடன்பிறப்புகள் பலர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

# விழுப்புரத்தில் புத்தகத் திருவிழா!

## அமைச்சர் செஞ்சி மஸ்தான் பங்கேற்பு!

விழுப்புரம், பிப். 9 -

விழுப்புரம் நகராட்சி திடலில் மாவட்ட நிர்வாகம் மற்றும் தென்னிந்திய புத்தக விற்பனையாளர் மற்றும் பதிப்பாளர்கள் சங்கம் சார்பில் புத்தக திருவிழா துவக்க விழா நடந்தது. விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் டாக்டர் பழனி தலைமை தாங்கினார். டாக்டர் லட்சுமணன் எம்.எல்.ஏ. முன்னிலை வகித்தார்.

புத்தகத் திருவிழாவில் அமைச்சர் செஞ்சி மஸ்தான் பங்கேற்று அரங்குகளை பார்வையிட்டார்.

நிகழ்ச்சியில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தீபக்சிவாச், மாவட்ட வருவாய் அலுவலர் பரமேஸ்வரி, கூடுதல் ஆட்சியர் ஸ்ருதன் ஜெய் நாராயணன், ஒன்றிய சேர்மன்கள், சச்சிதானந்தம், வாசன், மகளிர் திட்ட இயக்குனர் காஞ்சனா, தென்னிந்திய புத்தக பதிப்பாளர் சங்கத் தலைவர் சேது சொக்கலிங்கம், செயலாளர் முருகன், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் அறிவழகன் உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.